| O.S.No. 76/2024 | PW1: திருமதி. விண்ணரசி<br>க/பெ. திரு. டோமினிக் சேவியர் | 10-09-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் M.Sc., படித்துள்ளேன். என் கணவரும் M.Sc., வரை படித்துள்ளார். நான் ஆசிரியராக பணி செய்கிறேன். என் கணவர் NGO–வில் பணி செய்து, இயற்கை விவசாயம் செய்து வந்து இறந்துவிட்டார். என் கணவர் 2020–ம் ஆண்டு இறந்துவிட்டார். நாங்கள் 2005–ம் ஆண்டிலிருந்து திருமணி கிராமம் முனுகப்பட்டு கூட்ரோட்டில்தான் வசித்து வருகிறோம். தாவா சொத்து அல்லாத வா.சா.ஆ.2 பட்டாவில் உள்ள இதர சொத்துக்கள் திருமணி கிராமத்தில்தான் உள்ளது.

2. தாவா சொத்து அல்லாத இதர சொத்துக்கள் என் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் ஆகும். தாவா சொத்து அல்லாத இதர சொத்துக்களை யாரிடமிருந்து கிரையம் வாங்கினீர்கள் என்றால் என் கணவருக்குத்தான் தெரியும், ரொம்ப ஆண்டுகள் ஆகிவிட்டதால் மறந்துபோய்விட்டது. இதர சொத்துக்களை 2005–ம் ஆண்டிலிருந்து பணம் கிடைக்கும்போதெல்லாம் சிறுக சிறுக கிரையம் வாங்கினேன். அந்த சொத்துக்களை கிரைய ஒப்பந்தம் போட்டு அதன் பின்னர்தான் கிரைய பத்திரம் மூலம் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.

3. 2005 முதல் 2010 – ம் ஆண்டு வரை பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தத்தை போட்டு அதன் அடிப்படையில் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான், 3 மாதம் காலக்கெடு கொடுத்து அதன் பேரில் கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்டது. 2012–ம் ஆண்டிற்கு பிறகுதான் கிரைய ஒப்பந்தம் கட்டாய பதிவு செய்ய வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. பவானி, சாந்தகுமார் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியும், ஆனால் அவர்களிடம் பேசியதில்லை.

4. பாபு எனக்கு உறவு இல்லை. பாபு திருமணியை சேர்ந்தவரா என்றால் அங்கு அவர் பயிர் செய்து வந்தார். தாவா சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன்பாக ஒப்பந்தம் போட்டீர்களா என்றால் முன்பணம் கொடுத்து ஒப்பந்தம் போட்டு அதன்பிறகு கிரையம் வாங்கினேன். ரூ.2,65,000/–த்துக்கு கிரையம் பேசி ரூ.50,000/– முன்பணமாக கொடுத்தேன். கிரைய ஒப்பந்தத்தில் எவ்வளவு காலம் காலக்கெடு கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியவில்லை. அந்த கிரைய ஒப்பந்தத்தினை பதிவு செய்யவில்லை.

5. வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் ஏற்கனவே போட்ட கிரைய ஒப்பந்தம் குறித்து வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறுதான் எழுதப்பட்டது. அந்த கிரைய ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தின் அசல் என்னிடம்தான் உள்ளது, அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அசல் பத்திரத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்று காரணம் சொல்லமுடியுமா என்றால் என் வழக்கறிஞர் கேட்டதின் அடிப்படையில் நான் வா.சா.ஆ.1 ஆவணத்தை கொடுத்தேன்.

6. தாவா சொத்தை மட்டும்தான் பாபுவுக்கு விமலா கிருஷ்ணமூர்த்தி கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். விமலா கிருஷ்ணமூர்த்தி பாபுவுக்கு எழுதிக்கொடுத்த அசல் பத்திரம் என்னிடம்தான் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.6 பத்திரத்தின் அசல் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம்தான் உள்ளது. வா.சா.ஆ.6 பத்திரத்தில் அவரது கணவர் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்ததாக வாசம் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறுதான் எழுதப்பட்டுள்ளது.

7. பொதுவாக ஒரு சொத்தினை கிரைய ஒப்பந்தம் போடும்பட்சத்தில் அது பற்றிய விவரம் அந்த ஊரில் உள்ளவர்களுக்கு தெரியவரும் என்றால் சரிதான். அதேபோல் ஒரு சொத்து சம்மந்தமாக வழக்கு நீதிமன்றத்தில் இருந்தால் அதுபற்றிய விவரமும் அந்த ஊரில் உள்ளவர்களுக்கு தெரியவரும் என்றால் ஒரு சிலருக்கு தெரியும், ஒரு சிலருக்கு தெரியாமல் போகலாம். பொதுவா திருமணியில் எத்தனை தெரு உள்ளது என்றால் நாங்கள் மெயின் ரோட்டில் வசிப்பதால் அது எனக்கு சரியாக தெரியவில்லை.

8. வா.சா.ஆ.7 கிரைய பத்திரத்தில் விமலா கிருஷ்ணமூர்த்தியின் முகவரி 8A, MGR நகர், மூவேந்தர் நகர், சென்னை – 78 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 கிரைய பத்திதரத்திலும் விமலா கிருஷ்ணமூர்த்தியின் முகவரி 8A, MGR நகர், மூவேந்தர் நகர், சென்னை – 78 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விமலா கிருஷ்ணமூர்த்தி யார் என்று எனக்கு தெரியாது. விமலா கிருஷ்ணமூர்த்திக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் பவானி என்பவர் சாந்தகுமாரின் மனைவி என்று சொன்னால் சரிதான்.

9. சாந்தகுமார் பிரதிவாதிக்கு 14.10.2002 தேதியில் தாவா சொத்து மற்றும் ஒரு நஞ்சை சர்வே எண். 271/3C2A – 22 சென்ட் சொத்து குறித்து ஒரு கிரைய ஒப்பந்தத்தை எழுதிக்கொடுத்த விஷயம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது, சாந்தகுமாரிடம் பக்கத்தில் உள்ளவர்கள் கொஞ்சம் சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார். அந்த சொத்தினை சாந்தகுமாரிடம் வாங்கினார்களா என்றால் அது எனக்கு தெரியாது. சாந்தகுமாரிடம் கிரையம் வாங்கியவர்களின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

10. துளசிதாஸ் என்பவருக்கு சாந்தகுமார் கிரைய ஒப்பந்தம் போட்ட விஷயம் தெரியுமா என்றால எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் என் பெயரில் 22.04.2015 அன்று ஏற்பட்டது என்றால் சரிதான். நான் ஏற்கனவே கிரையம் வாங்கிய சொத்துக்களைப் பொருத்து வில்லங்கம் போட்டுதான் கிரையம் வாங்கினேன். தாவா சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன்பாகவும் வில்லங்கம் போட்டு பார்த்துதான் கிரையம் வாங்கினேன். தனிப்பட்டா பாபு பெயரில் இருந்ததை பார்த்தேன். அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றததில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

11. வா.சா.ஆ.8 வில்லங்க சான்றிதழ் 17.02.2024 அன்று பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். பாபுவுக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லப்படும் விமலா கிருஷ்ணமூர்த்தி பெயரில் பட்டா இருந்ததை பார்த்தீர்களா என்றால் பார்த்தேன், சாட்சியானவர் மீண்டும் அதுபற்றி சரியாக தெரியவில்லை, ஆனால் பாபு பெயரில் இருந்த பட்டாவை பார்த்ததாக கூறுகிறார்.

12. 14.10.2002 தேதியில் பிரதிவாதி பெயருக்கு சாந்தகுமார் மற்றொரு சொத்தை பொருத்து ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டு அவர்கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுக்காததால் பிரதிவாதி சாந்தகுமார் பெயரில் O.S.No.373/2006 வழக்கு தாக்கல் செய்து 11.04.2014 தேதியில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிரதிவாதிக்கு சாதகமாக வழங்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் சாந்தகுமார் ஆஜராகி பதிலுரை போட்டுள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது சாந்தகுமார் அவரது மனைவி பவானி பெயரில் வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணம்

எழுதிவைத்துவிட்டார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போதே சாந்தகுமார் இறந்துவிட்டதால் அவரின் வாரிசுகள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு வழக்கு நடந்து வந்தது என்று சொன்னால் அந்த விஷயம் 16.02.2024 அன்றுதான் பிரதிவாதி என் நிலத்தில் வந்து உரிமை கோரியதால் மேற்படி விஷயம் தெரியவந்தது. மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள விஷயம் சாந்தகுமார் இறந்தபிறகு அவரது வாரிசுகள் வழக்கில் சேர்க்கப்பட்ட விஷயம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், தற்போது வழக்கிற்காக தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.09.10 19:46:01 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**